DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 22** | |
| Name | : | திரு.சிவக்குமார். | Caste | : | |
| Father's Name | : | திரு.துரைபாண்டி | Calling | : | |
| Village | : | தஞ்சாவூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21th day of September 2023. 21-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 26/07/2021 அன்று நான் பணியில் இருந்த போது, குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவிடைமருதூர் அவர்களிடமிருந்து திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண் 648/2021, ச/பி 302 இதச வழக்கில், சரியாக மூடி முத்திரையிடப்பட்ட 5 காகித பொட்டளங்களை காவலர் 2410 திரு.அருண்சுந்தர் என்பவர் நீதிமன்ற உத்தரவுடன் ஆஜர் செய்தவற்றை நான் பகுப்பாய்வு செய்தேன். அந்த பொருட்களின் விவரம்

அயிட்டம்–1 கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய துருபிடித்த அரிவாள்–1, அதில் அழுக்கு படிந்த வெள்ளை நிற கயிற்றால் சுற்றப்பட்ட, துருப்பிடித்த கைப்பிடியுடன் கூடிய அந்த அரிவாளின் நீளம் 38.3 செமீ,

அயிட்டம்– 2 தாவர பொருட்கள் மற்றும் சிறிய கற்கள் அடைங்கிய மண்.

அயிட்டம்–3 கரும் பழுப்புநிற கறைகளுடன் கூடிய தாவர பொருட்கள் மற்றும் சிறிய கற்கள் அடைங்கிய மண்.

அயிட்டம் –4 தாவர பொருட்கள் மற்றும் சிறிய கற்கள் அடங்கிய மண்.

அயிட்டம்–5 முழுவதுமாக கரும் பழுப்பு நிறத்துடன் கூடிய கிழிந்து கசங்கிய நிலையில் உள்ள நீல நிற கைலி, அதில் வெள்ளை மற்றும் கருப்பு நிற குறுக்கு கோடுகள் போடப்பட்டிருந்தது. மேற்கண்ட 5 தடயப்பொருட்களையும் ரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதில், அதில் அயிட்டம் 1, 3 மற்றும் 5 ஆகியவற்றில் ரத்தக்கறை கண்டறியப்பட்டது. அயிட்டம் 2 மற்றும் 4 லில் ரத்தக்கறை கண்டறியப்படவில்லை. நீதிமன்றத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு பகுப்பாய்விற்கு மேற்சொன்ன சான்று பொருட்களை உட்படுத்த வேண்டி 26/07/2021 அன்று அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.20 ஆகும்.** அந்துடன் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதம் மற்றும் வழக்கின் வரலாறு இணைக்கப்பட்டுள்ளது. தலைமை காவலர் அருண் சுந்தர் எங்கள் அலுவலகத்தில் சான்று பொருட்களை 5 யும் ஒப்படைத்ததற்கு எங்கள் அலுவலகத்தில் கொடுத்த ஒப்புகை சீட்டு **அ.சா.ஆ. 21 ஆகும்.** இந்த உயிரியியல் அறிக்கை **அ.சா.ஆ. 22 ஆகும்.** பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு எங்கள் அலுவலகத்திற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டது. அதை ஆய்வு செய்து TAN TOX.H/948/2021 நாள் 05/08/2021 அன்று வயிற்றில் 201 மில்லி கிராம் அளவிற்கு எத்தில் ஆல்கஹால் இருந்தது, ஆனால் விசம் இல்லை என்றும், சிறுகுடலில் 58 மில்லி கிராம் அளவிற்கு எத்தில் ஆல்கஹால் இருந்தது, ஆனால் விசம் இல்லை என்றும், கல்லீரலில் 138 மில்லி கிராம் அளவிற்கு எத்தில் ஆல்கஹால் இருந்தது, ஆனால் விசம் இல்லை என்றும், சிறுநீரகத்தில் 104 மில்லி கிராம் அளவிற்கு எத்தில் ஆல்கஹால் இருந்தது, ஆனால் விசம் இல்லை என்றும், பாதுகாப்பு திரவத்தில் எத்தில்

ஆல்கஹாலோ விசமோ இல்லை என்று கண்டறியப்பட்டு உள்ளுறுப்புகளுக்கான பரிசோதனை அறிக்கை (Viscera Report) வழங்கப்பட்டது அந்த அறிக்கை **அ.சா.ஆ. 23 ஆகும்.** துணை இயக்குநர், வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு ரத்த மாதிரிகள் உயிரியியல் ஆய்வு முடிந்த பிறகு, எங்கள் அலுவலகத்தில் இருந்து சரியாக மூடி முத்திரையிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களிடமிருந்து குருதி வடிநீரியியல் அறிக்கை பெறப்பட்டது. அதில் அயிட்டம் 1 மற்றும் 5 இல் ரத்தம் மனித ரத்தம் என்றும், அதன் வகை B வகை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் அயிட்டம் 3 இல் ரத்தம் மனித இணமோ அல்லது ரத்த வகையோ கண்டறிய இயலவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த குருதி வடிநீரியியல் அறிக்கை **அ.சா.ஆ– 24 ஆகும்.** பொதுவாக நாம் சாப்பிடும் உணவை செறிமானம் செய்வதற்காக சுரக்கும் திரவத்தில் 50 மில்லி கிராம்/டெசி லிட்டர் அளவிற்கு ஆல்கஹால் இருக்க வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குருதி வடிநீரியியல் அறிக்கையும், உடல் கூறு அறிக்கையும், விசரா ரிப்போர்ட்டும் என்னால் தயாரிக்கப்படவில்லை. அந்த அறிக்கைக்கூரிய ஆய்வுகளை நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். தடயப்பொருட்களான அயிட்டம் 1 முதல் 5 நிபுணர்கள் உதவியுடன் கைப்பற்றப்படவிலலை என்றால் தெரியாது. பொதுவாக இவ்வாறு பொருட்களை கைப்பற்றுவதற்கு நிபுணர்களின் உதவி தேவை என்றால் ஆமாம். தடயப்பொருட்களில் உள்ள ரத்த மாதிரியும், இறந்தவரின் உடல் ரத்தமும் ஒத்து அமைந்துள்ளதா என்று கம்பேர் செய்து பார்க்கவில்லை என்றால் ஆமாம். பொதுவாக ரத்தம் வெளியேறிய 10 இல் இருந்து 15

நொடியில் உறைந்துவிடும் என்றால் அது அந்த தட்ப வெட்ப சூழ்நிலையை பொறுத்ததாகும். 3 முதல் 5 நிமிடங்கள் ஆகும். எங்கள் பகுப்பாய்விற்கு உயிருள்ள ரத்தம் மாதிரிகள் தான் தேவை என்றால் சரியல்ல. உறைந்த ரத்தத்தில் DNA Test தான் செய்யமுடியும் என்றால் சரியல்ல. என்னிடம் கொடுக்கப்பட்ட பொருட்களை ஆய்வு செய்வதற்கு ஒரு நாள் ஆகும். நான் இந்த வழக்கின் சான்று பொருட்களை ஒரே நாளில் ஆய்வு செய்தேனா என்றால் ஆமாம். மனித ரத்தம் தான் என்று எவ்வாறு எங்கள் ஆய்வில் கண்டு பிடிப்போம் என்றால் RH Factor யை வைத்து கண்டுபிடிப்போம். 1, 3, 5 அயிட்டங்கள் ஒரே ரத்த வகையை சார்ந்ததா என்றால் அயிட்டம் 1ம், 5ம் ஒரே ரத்த வகையை சார்ந்தது. ரத்தம் இரும்பில் படும் போது ஒரு நிறமும், மண்ணில் படும் போது வேறு நிறமாகவும் இருக்கும் என்றால் மண்ணும் அந்த இரும்பு கிடந்த இடமும் ஒரே தட்ப வெட்ப சூழ்நிலையில் இருந்தால் இரண்டு நிறமும் ஒன்றாக தான் இருக்கும். ரத்தம் வெவ்வேறு வகையான மண்ணில் வெவ்வேறு நிறம் கொள்ளும் என்றால் சரியல்ல. எந்த மண்ணில் விழுந்தாலும் ரத்தம் என்பது கரும்பழுப்பு நிறம் தான் அடையும். பொதுவாக இறந்த நபர்களிடம் ரத்தம் எடுக்கும் போது மனித உடல்களில் மூட்டில் தான் ரத்தக் மூலக்கூறுகள் கிடைக்கும் என்றால் அங்கேயும் கிடைக்கும் மற்ற இடங்களிலும் கிடைக்கும். மேற்சொன்ன இறந்த நபரின் உடலில் இருந்த எத்தில் ஆல்கஹால் பொதுவாக மனித உடலில் காணப்படும் அளவைவிட அதிகம் என்றால் சரி. நீதிமன்ற வேண்டுகோள் கடிதத்தின் பேரில் தான் நான் மேற்சொன்ன சான்று பொருட்களை ஆய்வு செய்தேன்.

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and

acknowledged by him/her to be Correct.

**ஒப்பம் (xxxxxx)**
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

**/உண்மை நகல்/**

**ஒப்பம் (xxxxxx)**
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 21** | |
| Name | : | திரு.சுரேஷ் குமார் | Caste | : | |
| Father's Name | : | காளிமுத்து | Calling | : | |
| Village | : | உப்பிலியப்பன் கோவில், தெற்கு வீதி | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21th day of September 2023. 21-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

என்னுடைய நிரந்தர முகவரி உப்பிலியப்பன் கோவில், தெற்கு வீதியாகும். நான் தற்போது வேலை நிமித்தமாக சென்னையில் வசிக்கிறேன். நான் அங்கு எலக்ரிக்கல் மற்றும் பிளம்பிங் வேலை பார்த்து வருகிறேன். சாட்சி சந்தான கிருஷ்ணன் எனக்கு சித்தப்பா. அ.சா.1 அருள் ராஜை தெரியும். இறந்து போன ராஜேந்திரனை தெரியாது. இறந்து போனவரின் மகன் மற்றும் மனைவியை தெரியாது. என் சித்தப்பா சந்தான கிருஷ்ணன் எனக்கு பக்கத்து வீடு. என் சித்தப்பா சந்தான கிருஷ்ணன் கோவில் சொதைவேலை பார்த்தார். என் அப்பாவுடன் பிறந்வர்கள் நான்கு பேர். என் அப்பா காளிமுத்து மூத்தவர். சந்தானகிருஷ்ணன் இரண்டாவது. தியாகராஜன் மூன்றாவது. சுரேந்திர் நான்காவது. என் தாத்தா பெயர் தெட்சிணமூர்த்தி. எங்களுக்கோ என் தாத்தாவிற்கோ அய்யாவாடி நாட்டாற்றங்கரையில் சொந்தமான விவசாயம் செய்யக்கூடிய சொத்துக்கள் எதுவும் கிடையாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு

விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

கேள்வி – நான் எப்போதுவரை உப்பிலியப்பன் தெற்கு வீதி என்ற என்னுடைய நிரந்தர முகவரியில் வசித்தேன் என்றால்?

பதில் – நான் அங்கு தான் வசித்தேன். துபாய் கொஞ்சம் நாள் வேலை பார்த்துவிட்டு திரும்பவும் என் ஊருக்கு வந்து இருந்தேன். சென்னை போய் 8 மாத காலம் ஆகிறது.

கேள்வி –துபாயில் எந்த காலகட்டத்தில் இருந்தேன் என்றால்?

பதில் – என்னால் வருடம் சரியாக சொல்ல முடியவில்லை.

கேள்வி –எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால்?

பதில் – இல்லை

கேள்வி –எங்கள் ஊரில் பழைய செட்டி தெரு என்று ஒரு தெரு உள்ளதா என்றால்?

பதில் – உள்ளது.

கேள்வி – எங்கள் தெருவிற்கும், அந்த தெருவிற்கும் எவ்வளவு தூரம் என்றால்?

பதில் – எதிர்புறமாக மூன்று தெரு தள்ளியுள்ளது.

கேள்வி – உப்பிலியப்பன் கோவிலில் எத்தனை குடும்பங்கள் உள்ளது என்றால்?

பதில் – நிறைய குடும்பங்கள் உள்ளது. பெரிய ஊர்.

கேள்வி – பழைய செட்டி தெருவில் சுப்பையன் மகன் ராஜேந்திரன் என்பவர் குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றாலும், எனக்கு அவரை நான்றாக தெரியும் என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி –ராஜேந்திரனுடைய அண்ணன் சந்திரகாசன் என் சித்தப்பா அனுபவத்தில் இருந்த 75 குழி ஆற்றுபுறம்போக்கை கிரயம் வாங்கி சந்திரகாசன் இறந்த பிறகு ராஜேந்திரன் தான் விவசாயம் வந்தார் என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – இந்த இடம் சம்மந்தமாக பழைய செட்டி தெருவில் வசிக்கும் ஜெயராமன்க மகன் செந்தில் குமார் என்பவருடைய மாமனார் முருகையனுக்கும், ராஜேந்திரன் அண்ணன் சுந்தரேசன் என்பவருக்கும் கோர்ட்டில் கேஸ் நடந்ததால் முன் விரோதம் உள்ளதாக நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால்?

பதில் – இல்லை.

கேள்வி –வெளிநாடு போய்விட்டு வந்த என்னையும், துரைசாமி மகன் சந்தோஷையும் செந்தில் குமார் கூப்பிட்டு, அய்யாவாடி ஆற்றங்கரையில் ராஜேந்திரன் விவசாயம் பார்க்கும் இடம் உங்கள் பாட்டனாருக்கு சொந்தமானது என்றும், அதை நீங்கள் இருவரும் போய் ராஜேந்திரனிடம் கேட்டால் காளவாய் போட்டு தொழில் செய்யலாம் என்று சொன்னதால் நானும், சந்தோஷும் போய் ராஜேந்திரனிடம் கேட்டு இடத்தை வரும் 30/06/2021 ற்குள் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று 20 ரூபாய் பத்திரத்தில் எழுதி வாங்கினோமா என்றால்?

பதில் – இல்லை.

கேள்வி –அ.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால்?

பதில் – இல்லை.

கேள்வி – இன்று நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக சார்வு செய்யப்பட்ட சம்மனில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால்?

பதில் – ஆமாம். என்னிடம் கோர்ட் போலிஸ் கையெழுத்து வாங்கினார். இந்த கையெழுத்து என்னுடையது தான். (அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.19 ஆகும்.)**

கேள்வி – எனக்கு இடம் சம்மந்தமாக ஒரு வக்கில் நோட்டீஸ் வந்ததா என்றால்?

பதில்– ஆமாம். வக்கில் நோட்டிஸ் வந்தது.

கேள்வி –நான் அந்த வக்கீல் நோட்டீஸை வாங்கிவிட்டு, வீட்டில் இருந்துவிட்டேனா என்றால்?

பதில்– ஆமாம். சம்மந்தம் இல்லை என்பதால் நான் கண்டுகொள்ளவில்லை.

கேள்வி –ஆனால் சந்தோஷ் ராஜேந்திரன் மீது கோவம் கொண்டு அவரை ஏதாவது செய்ய வேண்டும் என்று ஊரில் பேசிக்கொண்டிருந்தாரா என்றால்?

பதில்– தெரியாது.

கேள்வி – 01/07/2021 அன்று இரவு சுமார் 8 மணியளவில் சந்தோஷ் எனக்கு போன் செய்து, என்னை எங்க ஊர் மாந்தோப்பிற்கு வரச்சொன்னதால் நான் போனேன் என்றும், அங்கு துரைசாமி மகன் சந்தோஷும், ஜெயராமன் மகன் செந்தில் குமாரும் பிராந்தி குடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், என்னையும் குடிக்க சொன்னார்கள், நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் என்றும், சந்தோஷ் அந்தயிடத்தை நமக்கு தருவதாக சொல்லிவிட்டு இப்போது ராஜேந்திரன் வக்கில் நோட்டீஸ் அனுப்பியதால் அவனை ஏதாவது செய்யவேண்டும் என்று சொன்னான் என்றும், செந்தில் குமார் நீங்கள் என்னவேண்டுமானாலும் செய்யுங்கள் கோர்ட் செலவை நான்

பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னான் என்றும், அப்போது நான் எனக்கு திருமணம் ஆக இருக்கிறது எனக்கு இதெல்லாம் தேவையில்லாத விசயம் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால்?

பதில் – இல்லை.

கேள்வி –மறுநாள் 02/07/2021 அன்று ராஜேந்திரன் கொலை செய்யப்பட்டு கிடந்தார் என்றும், சந்தோஷ் கோர்ட்டில் சரணடைந்துவிட்டார், செந்தில் குமார் VAO முன்பு ஆஜராகிவிட்டார் என்று தெரிந்துக்கொண்டதாக ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால்?

பதில் – இல்லை.

கேள்வி – சந்தோஷ் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதை நான் அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால்?

பதில்– சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.